# ஈரோட்டின் வரலாற்று பயணம்...29

## பரிசல் ஓட்டிக்கு முதல் மரியாதை

வளைந்து ஓடும் பவானி ஆற்றில் ஆங்காங்கே சுழல்கள் உண்டு... மண்மேடுகளும், பாறைத் திட்டுகளும் தண்ணீரில் மறைந்து பரிசலை தாக்கும். ஆனால், இப்போது பரிசலை யார் தாக்குகிறார்கள் என்ற எண்ணத்தில் காலிங்கராயன் மனம் இல்லை. பூ எங்கே சுழல்கிறது என்பதில்தான் இருந்தது. காட்டுயானைகளையே உருட்டிக்கொண்டு ஓடி வரும் பவானியின் மேற்பரப்பு இன்று ஏனோ அமைதியாக இருப்பதுபோல தோன்றிது.

ஆனால், காலிங்கராயன் மனம் அலைபாய்ந்துக் கொண்டு இருந்தது. அதைவிட பரிசல் ஓட்டியின் மனமோ ஒருபுறம் சந்தோஷத்தில் எல்லை தெரியாமல் ததும்பிக்கொண்டு இருந்தது. என்னை ஆளுகின்ற காலிங்கராயன் என்னுடைய பரிசலிலா... மீன் பிடிக்கும் பரிசல் இன்று மன்னன் பயணம் செய்யும் பரிசலாக மாறி இருக்கிறதே... என்னே நான் செய்த பாக்கியம் என்று பரிசல் ஓட்டியின் மனம் எங்கெங்கோ பறந்து கொண்டிருந்தது. ஆனால், பவானி நதி ஆங்காங்கே எழுப்பிய குமிழ்களும், சிரிக்கும் சுழல்களும் கலக்கத்தை கொடுத்தன. என் தலைவனை ஏற்றிச் செல்லும்போது, பரிசல் எங்கேனும் சிக்கிவிடக்கூடாதே என்று வேறு புறம் அச்சத்தில் அடங்கிக்கிடந்தது மனசு.

மன்னர் நம்மை பார்க்கிறாரோ? சந்தேகம் மெல்ல எழ, முகத்துக்கு முகம் நேரில் பார்க்க சக்தி இல்லாமல், அவர் பாதங்களை நோக்கினார். பாதங்களை வைத்தே எடைபோட முடியாதா என்ன? காலிங்கராயனின் கால்கள் பூ மிதந்து செல்லும் திசையிலேயே தடம் பதித்து இருந்தன.

இதோ பவானியில் மிகப்பெரிய திருப்பம். இந்த இடத்தில் எப்படியும் பல சுழல்கள் இருக்கும். இங்கே ஏதேனும் பூ சுழல்கிறதா பார்ப்போம்... ம்கூம்... நமது எண்ணங்கள் போலவா வாழ்க்கை அமைந்து விடுகிறது. சுழல்களுக்கு சிக்காமல் இந்த பூ எப்படித்தான் பயணப்படுகிறது. பூவாகவா செல்கிறது. அன்னை செல்லியாண்டி அல்லவா... பூவை ஏந்தி செல்கிறாள்... இன்னும் சிறிது தூரம் சென்று விட்டால் ஒரு அதல பாதாளத்தில் பவானி சரியப்போகிறது. அங்கிருந்து தொட்டுவிடும் தூரத்தில் காவிரி...

காவிரிக்கு பூ சென்று விடுமோ? இருக்காது. இதுவரை இறைவன்மேல் வைத்த நம்பிக்கை வீண்போனதில்லை. என்னுடைய எண்ணப்படியே அம்மனும் வழி காட்டுவாள். ஒரே நேரத்தில் மனம் எத்தனையோ சிந்தனைகளை அள்ளித்தெளித்துவிட்டு அமைதியாக உட்கார்ந்து கொள்கிறது. ஆனால், அந்த சிந்தனைகள் ஏற்படும் பிற அதிர்வுகளை எப்படி தாங்கிக்கொள்வது? சாதாரண மனிதர்களுக்கு என்றால் அது சாத்தியமில்லைதான். ஆனால், இது காலிங்கராயன்... கனவுகளைக்கூட நிஜமாக்கும் வல்லமை பெற்றவர். எனவே அவருடைய மனத்தை பல எண்ணங்கள் சூழ்ந்தாலும், கடவுள் நம்பிக்கையும், கண்பார்வையும் பவானி ஆற்றின் அசைவுகளுக்கு அசையாமல் ஒரே சீராக சென்று கொண்டிருந்த பூவின் மீதே இருந்தது. இப்போது பரிசல் பவானி ஆற்றின் உள்ளே அமைந்திருக்கும் அணைத்தோப்பு பகுதிக்கு வந்திருந்தது. இன்னும் கொஞ்ச தூரம்தான். அதற்கு மேல் பூ நிற்கவில்லை என்றால் வெள்ளத்தின் வேகத்தில் பூவையே கண்டுபிடிக்க முடியாது. கொங்கு வேலன் மனம் அடக்கமுடியா கலக்கத்தில் இருந்தது. என்னதான் நடக்குமோ?...

அண்ணனின் முகத்தை பார்த்தார் கொங்குவேலன். ஆற்றில்தான் சலனம் இருந்தது. அவர் முகத்தில் வழக்கமாக பொங்கும் புன்னகை. பார்வை மட்டும் பூவை நோக்கி. கொங்கு வேலன் அந்தப்பூ முகத்தை பார்த்துக்கொண்டு இருக்கும்போதே, காலிங்கராயன் முகம் மகிழ்ச்சியாக மாறியது. அதோ அதோ பூ சுழல்கிறது. எந்த சுழலும் இல்லாத, தண்ணீரின் வேகம் அதிகமாக இருக்கும் அந்த இடத்தில் பூ யாரோ சுற்றி விட்டதுபோல சுழன்று கொண்டிருந்தது. பரிசல் ஓட்டிதான், அந்த இடத்தில் படகை நிலை நிறுத்த மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டு இருந்தார்.

தம்பி இடத்தை அடையாளம் செய்து வைத்துக் கொள். அம்மா செல்லியாண்டி தாயே உம் கருணையால் தேர்வு செய்யப்பட்ட இடத்தில் விரைவிலேயே அணைகட்டும் பணியை தொடங்க அருள் செய்... பரிசலில் இருந்தவாறே வேண்டுதலை முடித்துவிட்டு, கரையை நோக்கி பரிசலை செலுத்த சைகை செய்தார். கையின் அசைவை புரிந்து கொண்ட அவரும், பரிசலை வேகவேகமாக கரைக்கு செலுத்தினார்.

இதற்கிடையே கரைவழியாக பரிசலை பார்த்துக் கொண்டே வந்த எலவமலை கிராமத்து மக்களும் கரையில் காலிங்கராயனுக்காக காத்திருந்தனர். பட்டாசுகள் வெடிக்காமலும் அங்கே ஒரு மகிழ்ச்சித்திருவிழா அரங்கேறிக்கொண்டு இருந்தது.

அணை கட்டும் இடம் தேர்வு செய்தாகி விட்டது. இனி, மன்னர் வீரபாண்டியனுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும். அவருடைய ஒப்புதலுக்கு பின்னர்தானே பணியை தொடங்க முடியும்.



யோசனையில் ஆழ்ந்திருந்த காலிங்கராயன் முன்பு பரிசல் ஓட்டி கைகட்டி நின்று கொண்டிருந்தார்.

அவரைப்பார்த்த காலிங்கராயன், என்ன பரிசல்காரரே, இந்த அணை கட்டும் பணியில் உமது பங்கும் பெரிது. அடித்து ஓடும் பவானியில் அமைதியாக பரிசல் கொண்டு வந்து சேர்த்தீர் என்ன வேண்டும் கேளும்...

ஏதோ ஒன்றிரண்டு பொற்காசு தருவார், கொஞ்சநாள் குடும்பம் நடத்தலாம் என்றுதான் பரிசல்காரரின் மனது நினைத்தது. ஆனால், காலிங்கராயனின் கம்பீரக்குரல், சட்டென்று அவர் எண்ணத்தை மாற்றியது.

> காலிங்கராயன் முகம் மகிழ்ச்சியாக மாறியது. அதோ அதோ பூ சுழல்கிறது. எந்த சுழலும் இல்லாத, தண்ணீரின் வேகம் அதிகமாக இருக்கும் அந்த இடத்தில் பூ யாரோ சுற்றி விட்டதுபோல சுழன்று கொண்டிருந்தது.

அய்யா... அதெல்லாம் ஒண்ணும்வேணாங்க...

அட சும்மா கேளு... பரிசல் ஓட்டிக்கு சரி சமமாக அவரே பேசியது கேட்டு கூட்டத்தினருக்கு ஆச்சரியம். பரிசல் காரருக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை.

அய்யா... எனக்கும் ஒரு மிராசு கொடுத்திங்கனா அதுபோதுங்க...

மிராசு கேட்கிறான் இந்த பரிசல்காரன்... கூட்டத்தில் சலசலப்பு. என்ன தைரியம். நம்மோடு சமமாக இருக்க இவனுக்கு என்ன அருகதை இருக்கிறது. கொந்தளித்தது கூட்டம். ஆனால், இதற்கு காலிங்கராயன் என்ன சொல்லப்போகிறார்? என்பதைத்தான் அனைவரும் எதிர்பார்த்தனர்.

அவ்வளவுதானே... இந்த எலவமலை செல்லியாண்டி அம்மன் கோவிலில் உனக்கும் உன் சந்ததியினருக்கும் மிராசு உண்டு. உனக்குத்தான் முதல் மரியாதை... இது என் உத்தரவு. கூட்டம் திகைத்தாலும், காலிங்கராயன் உத்தரவுக்கு ஏது மறுபேச்சு... மகிழ்ந்தார் பரிசல்காரர். கட்டி அணைத்தார் காலிங்கராயன். அரசனும் ஆண்டியும் ஒன்றாக சங்கம் ஆவது என்பது இதுதானோ... காவிரியில் சங்கமிக்கும் முன்பு பவானித்தாய் ஒரு நிமிடம் நின்று பார்த்து விட்டு சென்றாள். சிலருக்கு கொஞ்சம் வருத்தம். இனி பரிசல்காரன் குடும்பத்துக்குதான் மிராசு கொடுக்கணுமா? என்று, அட காலிங்கராயனே கூறிய பிறகு, அதை ஏற்றுக்கொள்ளத்தானே வேண்டும்.

சுற்றிலும் நின்றவர்கள் தம்மையே கூர்ந்து பார்ப்பதை பரிசல்காரர் உணர்ந்து கொண்டார். இதுவரை குனிந்து நின்ற தலை கொஞ்சமாக நிமிரத்தொடங்கியது அந்த புதிய மிராசுக்கு...

ஆமா? மிராசு என்றால் என்ன?...

**பயணம் தொடரும்...**

